வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – நாராயணசாமி

தேதி 20.01.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

வளமான இந்தியப் பாரம்பரியத்துடன் மறுபிணைப்பு கொள்வதன் மூலம், நாட்டில் கலாச்சார மறுமலர்ச்சி ஒன்றை உருவாக்கத் தேவை இருப்பதாக, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

பொம்மை உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்கான அரசின் முயற்சிகளால், சுயசார்பு இந்தியா இயக்கம் வலுப்பட்டு, இந்திய கலை மரபுகளின் புகழும் பரவி இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாட்டின் வளர்ச்சியைத் தூண்டி, எதிர்காலத்திற்கு புது வடிவம் கொடுக்க, சுழற்சிப் பொருளாதாரம் மிக அவசியம் என்று, மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்திர யாதவ் கூறியுள்ளார்.

புதுச்சேரியில், தனியார் நிறுவனப் பணியிடங்களை நிரப்ப, தொழிலாளர் துறை வேலை வாய்ப்பகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேலை வாய்ப்பு முகாம், வரும் 24ஆம் தேதி நடைபெற உள்ளது.

-----------------------------

*தன்கர் 1* (7)

இந்தியாவின் செம்மொழிகள் மற்றும் வளமான பாரம்பரியத்துடன் மறுபிணைப்பு கொள்வதன் மூலம், நாட்டில் கலாச்சார மறுமலர்ச்சி ஒன்றை உருவாக்கத் தேவை இருப்பதாக, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், பாரதீய வித்யா பவனின் நந்தலால் நுவால் இந்தியவியல் மையத்திற்கு அடிக்கல்

நாட்டி பேசுகையில், அவர் இவ்வாறு வலியுறுத்தினார். குடியரசுத் துணைத் தலைவரின் உரை குறித்து மேலும் சில தகவல்கள்….

(வாய்ஸ்)

*தன்கர் 2* (13)

இந்திய ஞானத்திற்கும், உலகம் பற்றிய அதன் பார்வைகளுக்கும் இடையே, நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும், இந்தியா எப்போதும், நல்லிணக்கம் மற்றும் அமைதிக்கே பாடுபட்டு வந்திருப்பதாகவும் குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் கூறினார். நாட்டின் தொன்மையான மொழிகள் மற்றும் இலக்கியத்தை பேணிப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். இந்திய இளைஞர்கள், நாட்டின் கலாச்சார, பாரம்பரியத்தில் பெருமிதம் கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

காலனீய சக்திகள், இந்தியப் பராம்பரியத்தை, அறிவியலுக்கு எதிரானது என்பது போல திரித்து கூறியிருப்பது குறித்து, குடியரசுத் துணைத் தலைவர் கவலை வெளியிட்டார். தவறான இத்தகைய காலனீயக் கருத்துக்களுக்கு பதிலாக, இந்திய பார்வைகளின் அடிப்படையில், இந்தியர்கள், வரலாற்றை அணுக வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

-----------------------------

*மோடி-பொம்மை உற்பத்தி (9)*

நாட்டில், பொம்மை உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்காக அரசு மேற்கொண்ட முயற்சிகளால், சுயசார்பு இந்தியா இயக்கம் வலுப்பட்டு இருப்பதுடன், இந்தியப் பாரம்பரிய கலை மரபுகளின் புகழும் பரவி இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். மன் கீ பாத் அப்டேட்ஸ் சமூக ஊடகப் பக்கத்தில் இன்று வெளியாகி உள்ள பதிவிற்கான பதிலில், பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார். நாடு முழுவதிலும், கூட்டு முயற்சிகள் மூலம், பாரம்பரிய பொம்மை உற்பத்தியை

பெருக்குவது குறித்து, மன் கீ பாத் நிகழ்ச்சி ஒன்றில் தாம் பேசியதை பிரதமர் திரு. நரேந்திர மோடி சுட்டிக் காட்டி உள்ளார்.

-----------------------------

ஓம் பிர்லா (17)

சட்டமியற்றும் அமைப்புகளின் தலைவர்களுக்கு இடையிலான 85ஆவது அகில இந்திய மாநாட்டை, மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, பீகார் மாநிலம் பாட்னாவில் இன்று தொடக்கி வைத்தார். ஜனநாயகம் பிறந்த நிலம் பீகார் என்றும், நாகரீக மேம்பாட்டில், பீகார் மாநிலத்தின் பங்கு மிக முக்கியமானது என்றும் அவர் கூறினார். சட்டமியற்றும் அமைப்புகளில், மரபொழுங்கு மற்றும் கவுரவத்தை பராமரித்தல் அவசியம் என்றும், சட்டமியற்றும் நடைமுறைகள் மூலம் மக்களுக்கு சேவை புரிவதில், அவைத் தலைவர்களுக்கு பெரும் பொறுப்பு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். மக்கள் பிரதிநிதிகள், அரசியல் சாசன மாண்புகளுக்கு ஏற்ப, மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்றும், மக்களவைத் தலைவர் கேட்டுக் கொண்டார்.

அரசியல் சாசனத்தின் 75ஆம் ஆண்டை ஒட்டி ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இந்த 2 நாள் மாநாட்டில், மக்களவை, மாநிலங்களவை மற்றும், பல்வேறு மாநில சட்டமன்றங்களின் தலைவர்கள் கலந்து கொண்டு, அரசியல் சாசன மாண்புகளை வலுப்படுத்துவதில் சட்டமியற்றும் அமைப்புகளின் பங்களிப்பு என்ற மையக் கருத்து அடிப்படையில், முக்கிய விவாதங்களை மேற்கொள்கிறார்கள்.

-----------------------------

தொழிலாளர் 1 (16)

இந்தியாவில் பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களிடம் இருந்து, நேரடி அன்னிய முதலீடுகள் பெறப் பட்டதால், எளிதாக வர்த்தகம் புரியும் நிலை மேம்பட்டுள்ளதாக, மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில்,

அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் குறித்த, 2 நாள் சர்வதேச கருத்தரங்கை தொடக்கி வைத்து பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். தொழிலாளர்களுக்கு, எவ்வித பாகுபாடுமின்றி சமூகப் பாதுகாப்பு வழங்குவதே, அரசின் முக்கிய முன்னுரிமை என்றும், நாடு முழுவதும் 60 கோடி பேர், அரசின் சுகாதார பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் கொண்டு வரப்பட்டு, 5 லட்சம் ரூபாய் வரையிலான மருத்துவ சிகிச்சை இலவசமாக வழங்கப் படுவதாகவும், அவர் தெரிவித்தார். எவருக்கும் அடிப்படை உணவு கிடைக்காமல் போய்விடக் கூடாது என்பதற்காகவே, அரசு, மக்களுக்கு 5 கிலோ உணவு தானியங்களை வழங்குவதாகவும் அவர் கூறினார்.

தொழிலாளர் துறைச் செயலர் திருமதி சுமிதா தாவ்ரா, ஆகாஷ்வாணி செய்தியாளரிடம் பேசுகையில், நாட்டின் அனைத்து 60 கோடி தொழிலாளர்களையும், அரசின் பல்வேறு சமூகப் பாதுகாப்புத்

தொழிலாளர் 2 (6)

திட்டங்களின் கீழ் கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் குறித்து, இம்மாநாட்டில் விவாதிக்கப் படுவதாக தெரிவித்தார்.

நாட்டின் 90 சதவிகித அமைப்புசாரா தொழிலாளர்களை, ஒரே தரவுத் தொகுப்பின் கீழ் கொண்டு வருவதில் அரசின் , இ-ஷ்ரம் திட்டம் முக்கிய நடவடிக்கையாக திகழ்வதை, சர்வதேச சமூகப் பாதுகாப்பு சங்கத்தின் தலைவர் டாக்டர் முகமது அஸ்மான் பாராட்டினார்.

-----------------------------

சுழற்சி பொருளாதாரம் 1 (7)

நாட்டின் வளர்ச்சியைத் தூண்டி, எதிர்காலத்திற்கு புது வடிவம் கொடுக்க, சுழற்சிப் பொருளாதாரம் மிக அவசியம் என்று, மத்திய சுற்றுச் சூழல்

மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்திர யாதவ் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், நீடித்த வளர்ச்சிக்கான சுழற்சிப் பொருளாதாரம் என்பது குறித்த சர்வதேச மாநாட்டில் அவர் இவ்வாறு வலியுறுத்தினார். சுழற்சிப் பொருளாதாரம் என்பது, காலத்தின் தேவையே தவிர, சுய தெரிவு அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார். அமைச்சரின் உரை குறித்து, கூடுதல் தகவல்கள்.....

(வாய்ஸ்)

*சுழற்சி பொருளாதாரம் 2 (9)*

நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை எட்டுவதில், மோட்டார் வாகன உற்பத்தித் துறையின் பங்கு முக்கியமானதாக இருக்கும் என்று அமைச்சர் திரு. பூபேந்திர யாதவ் கூறினார். மின்சார வாகனங்களில், புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்களை அதிகமாக பயன்படுத்த வேண்டும் என்றும், மின் கலன்களுக்கு சக்தியூட்டத் தேவையான மின்சாரத்தையும் கூட, பசுமை முறையில்தான் தயாரிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். வனப் பரப்பை அதிகரிப்பதன் மூலமாகவே, காற்றின் மாசுப்பாட்டை குறைக்க முடியும் என்பதால், தாயின் பெயரில் ஒரு மரம் இயக்கத்தில், தொழில் துறையினர் தீவிரப் பங்கேற்க வேண்டும் என, அமைச்சர் மேலும் கேட்டுக் கொண்டார்.

-----------------------------

*சுரங்கத் துறை (11)*

சுரங்கத் துறை அமைச்சர்களுக்கு இடையிலான 3ஆவது தேசிய மாநாடு, ஒடிசா மாநிலம் கொனார்க்கில், இன்று தொடங்கி உள்ளது. மத்திய அரசின் சுரங்கத் துறை அமைச்சகமும், ஒடிசா மாநில அரசும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த 2 நாள் மாநாட்டை, மத்திய சுரங்கத் துறை அமைச்சர் திரு. கிஷண் ரெட்டி முன்னிலையில், ஒடிசா முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி தொடக்கி வைத்தார். மத்திய சுரங்கத் துறை, வனத் துறை, மற்றும், ரயில்வே அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகளும், 11 மாநிலங்களின் சுரங்கத் துறை அமைச்சர்களும், இம்மாநாட்டில் கலந்து கொண்டு, 2047ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை

மேம்படுத்தும் இலக்கை எட்டுவதில் சுரங்கத் துறையின் பங்கு குறித்தும், இதற்கென சுரங்கத் துறையில் மேற்கொள்ள வேண்டிய உத்திகள் குறித்தும் விவாதிக்கிறார்கள்.

-----------------------------

ஊக்கத் தொகை (9)

வீட்டு உபயோகத்திற்கான குளிர்சாதனக் கருவிகள், மற்றும், எல்இடி பல்புகளை தயாரிக்கும் நிறுவனங்களுக்கு, உற்பத்தித் திறனுடன் இணைந்த ஊக்கத் தொகை வழங்குவதற்கான 3ஆம் கட்ட விண்ணப்ப நடைமுறைகளில், மொத்தம் 38 விண்ணப்பங்கள் பெறப்பட்டதில், 24 நிறுவனங்கள் இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப் பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதையும் சேர்த்து, மொத்தம் 84 நிறுவனங்கள், இத்திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாகவும், இந்நிறுவனங்களால், மொத்தம் 10 ஆயிரத்த 478 கோடி ரூபாய் கூடுதல் முதலீடுகள் கிடைக்கும் என்றும், மத்திய தொழில்-வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

-----------------------------

கும்பமேளா (13)

உத்தரபிரதேஷ் மாநிலம் பிரயாக்ராஜில், மகா கும்பமேளாவில் பங்கேற்கும் லட்சக்கணக்கிலான பக்தர்களுக்கு, சுகாதாரமான உணவு கிடைப்பதை உறுதிபடுத்த, உணவுப் பொருட்களின் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம், வலுவான நடவடிக்கைகளை அமல்படுத்தி வருகிறது. ஆணையத்தின் உணவுப் பகுப்பாய்வு அதிகாரிகளும், நடமாடும் உணவுப் பாதுகாப்பு ஆய்வகங்களும், கும்பமேளா பகுதியில் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். சுகாதாரமான உணவு குறித்து விழிப்புணர்வு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கும்பமேளா பகுதியில் உள்ள உணவகங்களில், சுகாதார உணவு வழங்கப் படுகிறதா என்பது குறித்து, அவ்வப்போது ஆய்வு மேற்கொள்ளப் படுகிறது. கள அளவில், இதுகுறித்த புகார்களை உடனுக்குடன் விசாரித்து நடவடிக்கை எடுக்கவும், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதாக, உத்தரபிரதேஷ் மாநில அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

------------------------------

புதுச்சேரி-வேலை வாய்ப்பு (10)

புதுச்சேரியில், தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் இதர தனியார் நிறுவனங்களில் காலியாக உள்ள, சுமார் 200 பணியிடங்களை நிரப்ப, தொழிலாளர் துறை வேலை வாய்ப்பகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேலை வாய்ப்பு முகாம், வரும் 24ஆம் தேதி வெள்ளிக் கிழமை காலை 9.30 முதல், பிற்பகல் 1 மணி வரை, வேலை வாய்ப்பு அலுவலக வளாகத்தில் நடைபெற உள்ளது. மருந்தியல், கணக்கியல், கலை மற்றும் பொறியியல் பிரிவுகளில், டிப்ளமா மற்றும் இளங்கலை பட்டம் முடித்தவர்களும், முதுகலை நிர்வாகவியல் பட்டதாரிகளும், சான்றிதழ்கள் மற்றும் சுயவிவரப் பட்டியலுடன் இதில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என, வேலை வாய்ப்பு அலுவலகம் அறிவித்துள்ளது.

------------------------------

வானிலை (7)

மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய இலங்கை பகுதிகளில், வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுவதால், இன்றைய தினம், தென்தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, நெல்லை மாவட்டம் ஊத்து பகுதியில், 23 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

------------------------------

ஆஸ்திரேலிய ஓபன் (8)

மெல்போனில் நடைபெறும், ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் சேம்பியன் பட்டப் போட்டிகளின் ஆடவர் ஒற்றையர் பிரிவில், உலகின் நம்பர்-ஒன் ஆட்டக்காரரான இத்தாலிய வீரர் ஜான்னிக் சின்னர், டென்மார்க் வீரரை தோற்கடித்து, காலிறுதி நிலைக்கு முன்னேறி உள்ளார். மற்றொரு

இத்தாலிய வீரர் லாரன்சோ சோனேகோ-வும், காலிறுதி போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார். மகளிர் ஒற்றையர் பிரிவில், அமெரிக்காவின் மேடிசன் கீஸ், உக்ரைன் வீராங்கனை எலினா ஸ்விட்டோலினா ஆகியோர் காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

-----------------------------

*என்சிசி-ராஜ்நாத்* (11)

இளைஞர்களே நாட்டின் மிகப் பெரிய சொத்து என்று, நாட்டை கட்டமைத்து வளப்படுத்துவதில், இளைஞர்களின் பங்கு மிக முக்கியமானது என்றும், பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், குடியரசு தின என்சிசி முகாமில் உரையாற்றிய அவர், இந்தியாவின் கலாச்சாரத்தை பிணைத்து வைத்து இருப்பதே, 140 கோடி இந்தியர்களின் ஒற்றுமைதான் என்றும், தனிப்பட்ட ஒவ்வொரு நபரின் வளர்ச்சியே, சமூகத்தின் வளர்ச்சியாக பிரதிபலிக்கும் என்றும் கூறினார். நாட்டை முன்னேற்றப் பாதையில இட்டுச் செல்வதற்கான அடிப்படையாகத் திகழும் ஒழுக்கம், ஒற்றுமை, தேசிய ஒருமைப்பாடு ஆகிய மாண்புகளுக்கு, மக்கள் தங்களின் வாழ்வில், முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

வளமான இந்தியப் பாரம்பரியத்துடன் மறுபிணைப்பு கொள்வதன் மூலம், நாட்டில் கலாச்சார மறுமலர்ச்சி ஒன்றை உருவாக்கத் தேவை இருப்பதாக, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

பொம்மை உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்கான அரசின் முயற்சிகளால், சுயசார்பு இந்தியா இயக்கம் வலுப்பட்டு, இந்திய கலை மரபுகளின் புகழும் பரவி இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாட்டின் வளர்ச்சியைத் தூண்டி, எதிர்காலத்திற்கு புது வடிவம் கொடுக்க, சுழற்சிப் பொருளாதாரம் மிக அவசியம் என்று, மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்திர யாதவ் கூறியுள்ளார்.

புதுச்சேரியில், தனியார் நிறுவனப் பணியிடங்களை நிரப்ப, தொழிலாளர் துறை வேலை வாய்ப்பகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேலை வாய்ப்பு முகாம், வரும் 24ஆம் தேதி நடைபெற உள்ளது.